# தமிழ்ச்சூழலில் சூழலியப் பெண் நிலைச் சிந்தனை

# Tamilsoozhalil Soozhaliya Pen Nilai Sinthanai

***முனைவர் பி. அனுராதா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
*K.P.R.* கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி, அரசூர், கோவை

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியம் நிலம் சார்ந்த (திணையை)/நிலத்தை அடிப்படையாகக் கொண்ட இலக்கியம். ஆதலால், சங்கப் பெண்பாற் புலவர்களின் வழி தமிழ்ச்சூழலில் சூழலியப் பெண் நிலைச் சிந்தனையை அறிவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு எனலாம். அன்று முதல் இன்று வரை எல்லா இலக்கியங்களும் பெண்ணை இயற்கையோடும் இயற்கையைப் பெண்ணோடும் ஒப்பிடுகிற பாங்கு இயல்பானதே. மேலும், இத்தகு சூழலியப் பார்வை பெண்ணுக்கு மிகுந்த மனநிறைவைக் கொடுத்திருக்க வேண்டும். அவள் அதைத் தன் மொழியில் பதிவு செய்திருக்க வேண்டும்.*

***முக்கியச் சொற்கள்:***

*சங்க இலக்கியம், ஆதிக்க சக்தி, இரண்டாம் உயிரி, இயக்க உறவு, பெண்ணியம்*

**Dr. P. Anuradha**
*Assistant Professor, Department of Tamil*
*K.P.R. College of Arts, Science and Research*
*Arasur, Coimbatore*

**Abstract**

*Sangam literature is land-based (departmental) land-based literature. Therefore, it is possible that there is a possibility of understanding the ecological feminist thinking in the Tamil context in the way of the Sangam feminist poets. It is natural for all literature from then until today to compare woman with nature and nature with woman. Moreover, such an ecological view must have given the woman great satisfaction. She should have recorded it in her own language.*

***Keywords:***

*Sangam Literature, Dominance, Second Organism, Movement, Feminism*

**Citation**

Anuradha, P. "Tamilsoozhalil Soozhaliya Pen Nilai Sinthanai." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 1–11.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20137743*

**முன்னுரை**

*ஆதிக்க சக்திகளின் மொழியியக்கத்தின் நடுவே தன் மொழி அரசியலைப் பெண் உட்புகுத்த வேண்டிய தேவை என்ன? சமூக மதிப்பீடுகள், சமூகத் தகுதி, சமூகத்தின் பொது புத்தி போன்றவைகளால் காலத்திற்கு காலம் அவளது மொழி சூட்சமமாக உருக்கொண்டிருக்கிறது. எனவே தமிழ்ச் சூழலில் மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூகம், பொருளாதாரம், அரசியல் என்ற அனைத்துக் கூறுகளிலும் பெண் நிலையைப் பேச வேண்டிய கட்டாயம் உண்டாகிறது.*

*இக்கூறுகள் பெண்ணை “இரண்டாம் உயிரி” எனக் கூறி அவளது வலிமையைக் குறைக்க முற்படுவதைக் காணலாம். இன்றைய சூழலில் பெண்ணியம் சார்ந்த பல கொள்கைகள் கோட்பாடுகள் பேசப்பட்டாலும் சூழலியப் பெண் நிலைக் கோட்பாட்டிற்கான வரையறைகள் வகுக்கப்படாததே மேற்கூற்றை உறுதிப்படுத்துகிறது.*

*இயற்கைக்கும் மனித உயிர்களுக்குமான தொடர்பையும் பெண் தன்னை இயற்கையோடு தகவமைக்கிற தன்மையையும் அறிதல் அவசியமாகின்றது. இத்தகு நிலையே சூழலியல் பெண்நிலைச் சிந்தனைக்கு அடிப்படை என்பதால் பெண் - இயற்கை இரண்டிற்குமான புரட்சி ஒன்றிலொன்று தொடர்புடையது. எனவே பெண்ணிற்கும் இயற்கைக்குமான உறவை மீட்டெடுத்தல் என்பது பெண்ணின் சூழலியச் சிந்தனையை மீட்டெடுக்க உதவுகிறது. அவ்வழி சூழலியப் பெண்நிலைக் கோட்பாட்டை உருவாக்க வழி வகுக்கும். இந்த ஆய்வானது தமிழ்ச்சூழலில் சூழலியப் பெண் நிலைச் சிந்தனை குறித்து கவனம் கொள்கிறது.*

**பெண்நிலைச் சிந்தனையும் சூழலியமும்**

*தந்தைவழிச் சமூக அமைப்பு பெண்ணைப் போர் அடிமை, பரிசுப்பொருள், அந்தப்புற அடிமை, பந்தயப் பொருளாக வடிவமைத்து வைத்ததன் விழைவு ஒடுக்கப்பட்டவர்களின் குரல்கள் அவர்கள் படைப்புகளில் வெளிப்படலாயிற்று. புறவெளியைக் கண்டறியாதிருக்கும் வரை அகவெளி அவளுக்குப் போதுமானதாக, திருப்தியுடையதாக இருந்தது. தன் காதலை, காதலனை, தன் மேனி வனப்பு வீணே தொலைவதை எண்ணி வாடிய பெண்*

***“எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே”[1] (புறம்-206)***

*என்று குரல் எழுப்பத் தொடங்கிய காலமே சமூகப் பண்பாட்டு பாகுப்பாட்டினை மறுவாசிப்பிற்கு உள்ளாக்குகிறது. மறுவாசிப்பு அல்லது மறுமலர்ச்சி உண்டாவது பெண் “மீட்சி” பெறுதலில் உள்ளடங்கும். அதாவது, தம் மீதான கட்டுப்பாடுகளிலிருந்து பெண்கள் விடுதலை பெறுவது எனக் கூறலாம். பெண்நிலைச் சிந்தனை என்பதும் தம்மைச் சுற்றியுள்ள இவ்விதக் கற்பிதங்களைப் பெண் எதிர்ப்பதும் தவிர்ப்பதும் தேவை என்ற அடிப்படை மீட்டெடுப்பிற்கு வித்திடுகிறது. பொதுவாகச் சங்க இலக்கியத்தில் உள்ள இயற்கை வருணனைகள் வெறும் அழகியல் சார்ந்து மட்டும் நின்று விடாமல் தொல்காப்பியத்தின் திணைக் கோட்பாட்டுடன் நேரடித் தொடர்பு கொண்டவைகளாக உள்ளன.*

*தன் வாழ்வியல் சூழலோடு தொடர்புடைய பிற உயிர்களையும் நேசிக்கிற பாங்கு பெண்பாற் புலவர்களின் தனித்த் இயல்பாக இருப்பதை,*

***“அரிது அவாவுற்றனை நெஞ்சே! நன்றும்***
***பெரிதால் அம்மநின் பூசல், உயர்கோட்டு***
***மகவுடை மந்தி போல”[2] (குறு-29)***

*என்ற பாடலால் அறியலாம்.*

*அடிவயிற்றைத் தழுவும் குட்டியால் மகிழும் மந்தி போல என்ற உவமையின் ஆழம் கவனிக்கத்தக்கது. அடிவயிறு உயிர்ப்பு ஆற்றலின் குறியீடு (தாய்மை) எல்லா உயிர்க்குமான இயற்க்கைக் குறியீடு. அதுபோல தனக்கு இன்பம் பயக்கும் என்ற மொழி ஆளுமை இங்கு நினைவுகூரத்தக்கது.*

*(நற்-84,160,161) இத்தகு இயற்கைக்குறியீடு பெண்ணைச் சூழலியலோடு தொடர்புபடுத்துகிறது எனலாம். இத்தகு உயிர்ப்பு ஆற்றலை உணர்ந்த தலைவியை, ''அடிவயிற்றின் வெம்மையை'' எடுத்துரைப்பதால் அறியலாம்.*
*மேலும்,*

***''உள்ளார் கொல்லோ! தோழி! உள்ளியும்,***
***வாய்ப்புணர்வு இன்மையின் வாரக் கொல்லோ?***
***மரற்புகா அருந்திய மாஎருத்து இரலை,***
***உரற்கால் யானை ஒடித்து உண்டு எஞ்சிய***
***யாஅ வரிநிழல், துஞ்சும்***
***மாஇருஞ் சோலை மலை இறந் தோரே''[3] (குறு-232)***

*என்ற பாடலில் (மரல்-சிறு செடி) சிறிய செடி வகைகளை உணவாக உட்கொண்ட பெரிய கழுத்தையுடைய இரலை மான், உரல் போன்ற காலையுடைய யானை ஒடித்து உண்டதன் மீதம் ஆகிய மரத்தின் நிழலில் தூங்கும் என்ற வரிகள் பெண்ணுக்கும் இயற்கைக்குமான தொடர்பைப் புலப்படுத்தும். இரலை மான் சிறு செடிகளை உண்பதை ரசிக்கவும் பெரிய மரக்கிளைகளை ஒடித்து உண்கின்ற யானையை ரசித்தலும் என்ற இருமாறுப்பட்ட உணர்வுநிலையைப் பெண் அன்றி உணர இயலாது.*

**நற்றிணையில் புலவர் பெயர் அறியப்படாத பாடல் ஒன்று**

***''வந்தனன் வாழி தோழி! உலகம்***
***கயம்கண் அற்ற பைதுஅறு காலைப்***
***நள்என் யாமத்து மழைபொலிந் தாங்கே'' (நற்-22)***

*சூலோடு வாடிய நெற்பயிருக்கு மழை வந்தது போல தலைவன் வந்தான் என்று குறிப்பிடுவது பெண்களின் சூழலியப் பெண்நிலைச் சிந்தனைக்குச் சான்றாகும். தலைவனின் பிரிவு குறித்த பாடல்கள் தலைவிக்குச் சூழலியல் சார்ந்த தொடர் சங்கிலி அமைப்பின் மாறுபாடாய்க் காட்சியளிக்கிறது. மேலும், தன் கணவனை இழந்த பெண்ணின் வாழ்வு கைம்மை நோன்பால் பெருந்துயர் உறும் என்று கூறும் பெருங்கோப்பெண்டு எனும் புலவர் அதனினும் தீயில் உயிர் துறத்தல் நன்று என்கிறார். கைம்மையினும் கொடியது இல்லை என்கிற புலவர் பெண்ணின் துயரை சபையேற்ற பஞ்சபூதங்களில் ஒன்றான தீயைக் கையாள்வது நோக்கத்தக்கது. பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சமூக சட்டதிட்டங்களை மீறுதல் ஒருபுறமும், இயற்கையின் உயிர்ப்பு ஆற்றல் சார்ந்த பெண்நிலைச் சிந்தனை ஒருபுறமும் என இறுபெருவெளிகளில் பயணிப்பது பெறப்படுகிறது. இக்கருத்தினடிப்படையில்,*

*வெள்ளிவீதியாரின் (குறு-386) வது பாடலில் ''இரவைக்கடல்'' போன்றது என்றும் (குறு-149) வது பாடலில் ''நீருள் மணல்'' போன்று ''காமத்துள் வெட்கம் காணாமல் போனதையும்'' பெண் தன் உணர்வு நிலையில் கூட இயற்கையை உவமையாக்குவதும் இங்கு கருதத்தக்கதாகும்.*

*''ஆழிப் பேரலை'' கடல்கோள் கண்ட அக்காலத்தவர்க்குப் பெரிதல்ல எனினும் நீண்டு உயர்ந்த மரத்தின் கிளைகளைத் தொடும் வெள்ளம்.*

***"நீடிய மராஅத்த கோடுதோய்"[4]*** *(குறு-99)*

*என்ற ஔவையின் வரிகள் பெண்களின் அறிவாற்றலுக்கும் சூழலியப் பார்வைக்கும் சான்றாகிறது.*

*மேலும், தனது அழகு மெலிந்ததை*

***"முரிந்த சிலம்பின் நெரிந்த வள்ளியின்***
***புறன் அழிந்து ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்***
***ஆயமும் அழுங்கின்று"[5]*** *(நற்-295)*

*''கிழங்கோடு கிள்ளிய வள்ளி''க்கு உவமையாக்கியமை அழகியல் தன்மையாக இளமை வீணாவது குறித்து நின்றாலும் அதனினும் உள்ளார்ந்த உணர்வாக வருந்துகிற ஆற்றாமையை வெளிப்படுத்துவது ஒற்றைக்குறியீட்டுப் பொருண்மையில் அல்லாது பெண்நிலைச் சிந்தனையாக முன் நிற்கிறது எனலாம். இத்தகைய உள்ளுறைகளை, உவமைகளைக் கையாள்வதன் மூலம் இயற்கைக்கும் தங்களுக்குமான உறவு நிலையைத் தக்கவைத்துக் கொள்கிற முனைப்பு அறியஇயலும். மேலும் இதன் வாயிலாக தன்னுடைய உணர்வை இயற்கையின் உயிர்ப்பு ஆற்றலாக்கிச் சமுகத்தின் பொது புத்தி மரபை மீறி வெளிப்படுத்துவதால் அவளது சூழலியப் பார்வையின் தன்மையை உணரத்துகிறது.*

**பெண்நிலை குறித்தத் திறனாய்வுகளும் அதன் போக்குகளும்**

*உலகெங்கிலும் பெண்ணியம் குறித்த பார்வை பெருகியுள்ள இன்றைய சூழலில் பெண் தன்னிலை உணரப் பாடுபடும் திறனாய்வுகளும் அத்தகு திறனாய்வின் வழி பெண் அடைய வேண்டிய ''இடம்'' குறித்தும் தமிழ்ச்சூழலில் ஆராய்வது முக்கியமாகின்றது. தன்னிலை உணராத தன்னை, தன்னுடல் சார்ந்த அறிவில்லாத பெண் ஆணாதிக்கத்திற்குள் அதிகார வட்டத்தின் எல்லைக்குள் தானாகவே சென்று அகப்பட்டுக் கொள்கிறாள். இதைத் தவிர்க்கவே இத்தகுத் திறனாய்வுகளும் அதன் உண்மைகளும் தேவைப்படுகின்றன. பெண்மை, பெண்ணியம், பெண்ணியல்பு போன்ற சொற்கள் பயன்பாட்டில் இருப்பினும் இவற்றின் மையப்புள்ளி ''பெண் நிலைசுசு யையே சாரும் என்பதால் இவ்வாய்வில் பெண் நிலை குறித்துப் பேசப்படுகிறது. எனினும் இவ்வாய்வின் மூலம் ''சூழலிய நோக்கு'' என்பதால் இங்கு பெண்நிலையோடு அனிட்சையாகவே பங்கு பெறும் எனலாம்.*

*பொதுவாகவே வேறு எந்த இலக்கியப் படைப்பை விடவும் வீரிய மிக்க வார்த்தைகளைக் கொண்டது கவிதை. இத்தகு கவிதைகளைத் திறனாய்வு செய்வதன் வழியாகப் படைப்பாளியின் கருத்துப் பின்புலம் எத்தகையது அல்லது அதற்கான சமுகத் தேவை எதுவாகிறது என்பதை அறியலாம். மனித குல வரலாற்றில் பெண் பற்றிய பொதுப்பார்வை அவளை இன்னும் பின்னுக்குத் தள்ளுகிறது. பெண்மை, கற்பு என்ற கற்பிதங்கள் அவளுக்கான பாதுகாப்பான சிறையை ஏற்படுத்தி விடுகிறது. இந்நிலையில் தன்னை உணர்ந்த அல்லது உணர இலக்கியப் படைப்பாளி முயலுகிறாள். இவ்வகைப் படைப்பினூடாகச் செயல்படுகிற கொள்கைகளையும் பெண்நிலை சார்ந்த திறனாய்வுகளையும் ஆய்வதன் மூலம் பெண்ணின்*

*தனித்த அடையாளத்தையும் இவ்வகைக் கோட்பாடுகளினூடாகப் பயனிக்கிற சூழலியப் பெண்நிலைச் சிந்தனையையும் வரையறை செய்ய முடியும் எனலாம்.*

**இயக்க உறவு**

*பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் காலந்தோறும் ஒவ்வொரு பிரிவினிரிடையே மாறுபட்டு வழங்கப்பட்டு வந்துள்ளன. இவையாவும் பெண்ணுக்கெதிரான கொடுமைகளை எதிர்ப்பது என்ற மய்யத்தையே சென்றடைந்தன. அவ்விளக்கங்களின் படி,*

"*17- ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் என்ற சொல் முதன் முதல் உபயோகப்படுத்தப்பட்ட போது அது என்ன அர்த்தத்தைத் தந்ததோ அதனின்றும் இப்பேர்து அது முற்றும் மாறுபட்டதாகவே இருக்கின்றது. இது பல்வேறு நிலையுள்ள பெண்களால், அவர்களின் வர்க்கப் பின்னணி. கல்வித் தகைமை, உணர்வு நிலை இவை போன்றவற்றைப் பொறுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒரு தேசத்துக்குள்ளேயும் பல்வேறு வகையாகப் பேசப் படலாம்.*"[6]

"*தொல்காப்பியரின் மொழி நூற்கொள்கைகளின் தொகுப்பைத் தொல்காப்பியம் என்று பெயரிட்டமை போன்று, பெண்டிர் நலக்கொள்கைகளின் தொகுப்பான பெண்டிர் உரிமை வேட்டலைப் பெண்ணியம் எனலாம். (நச்சினார்க்கினியம். பெரியாரியம் என்ற மரபுகள் இங்கே ஒப்பிட்டுக் கூறத்தக்கவை*"[7]

*பெண்ணியம் என்பது* "*பெண்ணின் நிலையை அதாவது உலகத்தோடு பெண் எத்தகைய தொடர்பு கொண்டிருக்கிறாள்? எவ்வாறு அவள் அடக்குமுறைக்கு ஆளாகிறாள்? ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற நிலை நிலவுதல் போன்ற பல செய்திகளை நன்கு அறிவதும் அவ்வறிவினை மேற்கூறிய நிலையை மாற்றியமைக்கத் தக்க சக்தியாகப் பயன்படுத்துதலும்*"[8] *எனலாம்.*

"*ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, பெண்ணியம் என்ற பொருள் தரும் ஆங்கிலச் சொல்லுக்கு* "Feminisem A movement for the Recognition of the claim of woman for right equal to those posessed by men[9] *என்று விளக்கமளிக்கிறது.*

**மார்க்சியவியலாளர்களின் கருத்துப்படி**

*பெண்ணியம் பற்றிய ஒரு விரிவாக்கப்பட்ட விளக்கம் என்பது,* "*பெண்களுக்கும், ஓரினப்புணர்ச்சியாளர்களுக்கும் விடுதலை தருவதையும் அனைத்து மக்களுக்கும் பாலியல் தன்னுரிமை தருவதையும் லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும். இதன் பொருள் நாம் மனித இனத்தின், பால் தன்மைகளை* (Sexuality) *மனித உறவுகளையும் மறு மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதே. நம்முடைய சில மிக அடிப்படையான பொதுபுத்தி சார்ந்த புரிதல்களை* (Commonsense) *தூக்கியெறிந்து விட வேண்டும் என்தம் இங்கு கருதத் தக்கதாகும்.*

*மனித குல வரலாற்றிற்கு பொருள் உற்பத்தி போன்றே மறு உற்பத்தியும் அவசியமாகும். இதில் முன்னது ஆணிற்குரியதாகவும் பின்னது பெண்ணின் ஆற்றலாகவும் வெளிப்படுவது கண்கூடு. மேற் குறிப்பிட்ட கருத்தாக்கங்களின் வழி* "*பெண் நிலை ஒடுக்கப்பட்ட சமுக*

*தளத்திலிருந்து மீண்டு வருவதற்கான முயற்சியே பெண்ணியத்தின் தோற்றுவாய் ஆவதை" அறியலாம். பெண்ணியத்தை மீட்டெடுக்கப் போராடும் கொள்கைகள் இயக்கத்திற்கு ஏற்ப மாறுபாடு கொள்ளும்.*

*அ)தீவிர வாதப் பெண்ணியலார், "தந்தைவழிச் சமுதாயத்தை உடைத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டனர். இதன் வேர் உயிரியல் ரீதியான குடும்பம் என்பதால் குடும்பத்தையும் முற்றுமாக உடைக்க விரும்பினார்கள்"[10] என்று ஆணையும் குடும்பத்தையும் சார்ந்திராத பெண்ணை உருவாக்கப்பாடுபட்டது.*

*ஆ)மிதவாதப் பெண்ணியலார், "சமூக அமைப்பு முறையை குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக் கொண்டு சமூகப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டு வர விரும்பினர்"[11]*

*இ)சோசலிசப் பெண்ணியலார், "சமூக அமைப்பே குறைபாடுள்ளது. அதனால் சமூக அமைப்பைப் புரட்சியின் மூலம் மாற்ற வேண்டுமென விழைகின்றனர்"[12]*

*இவ்வியக்கங்களின் பெண், பெண் நிலை குறித்த கருத்துக்கள் சென்றடைகின்ற மையப்புள்ளியாக,*

1. *ஆதிக்கத்திற்கு உட்படாதவளாகப் பெண் நிலை உருவாக்கப்படல்.*
2. *சார்புத் தன்மையற்ற சுய பிரக்ஞையுடைவளாகப் பெண் திகழ வேண்டும்.*
3. *சமூக அமைப்புகளுக்குட்பட்டு வாழ்தலை மீறுதல் வேண்டும்.*
4. *தன் அடிமைத்தனத்தை தானே கட்டிக்காக்கிற வழக்கத்திலிருந்து அவள் விடுதலை பெற வேண்டும் என்றமைவதைக் காணலாம்.*

**மொழி உறவு**

*மனித உணர்வுகளை வெளியிட ஒருவரையொருவர் உணர மொழி அவசியமாகிறது. அத்தகைய மொழி ஆண் மையச் சமூகத்தின் ஆதிக்கம் கொண்டதாக இருப்பின் அங்கு பெண்ணின் உணர்வுகள் கேள்விக்குள்ளாக்கப்படும். இதை,*

*"சமூகத்தால் உருவாக்கப்பட்ட கூற்றுக்கள் பல ஓர் அதிகாரத்தின் பாற்றபட்டதாகத் தெரிகிறது. மொழி வழக்கின் தளம் கூட ஓர் ஆதிக்க நிலையின் வெளிப்பாடே. இலக்கண, இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்தபடியால், ஆதிக்கமும் அதிகாரமும் அவர்கள் கையில் இருந்தபடியால் மொழியில் ஆணிலை நோக்கு ஒன்று மிக இலகுவில் புகுத்தப்பட்டுவிட்டது என்பதையும் நாம் மறுக்கக்கூடாது.*

*உயர்சாதி, உயர்வர்க்கம், ஏகாதிபத்தியம், பாசிசம், பெரும்பான்மை மக்கள் போன்றோர் அதிகார ஆதிக்கமில்லாத குறை நிலையில் உள்ள மக்கட் கூட்டங்களுக்கு அவர்களது குறைநிலைக் கருத்தியலை உணர்த்தும் மூலமாக பல்வேறு மொழிப் பதங்களை உருவாக்கியுள்ளனர்"[13] என்பதால் அறியலாம்.*

*இவ்வாறு மொழி வழியாகக் கையாளப்பட்டு வரும் ஆணிய மொழிக் கருத்தாடல்கள் கேள்விக்குள்ளாக்கப்படும் சூழலே பெண்ணிற்கான மொழி உருவாக்கத்திற்கு உதவுகிறது.*

*தன்னுடல் மீதான (கற்பு) பாதுகாப்பு பயத்தைக் காலங்காலமாகப் போற்றி - பரம்பரைக்குச் கடத்தவும் பயன்படும் சொல்லாடல்கள் மொழி வெளியில் புழக்கத்தில் உள்ளதைப் பெண் உணர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு,*

*"சமூகத்தால் உருவாக்கபட்ட செயற்கைப் பெண்மை இயல்பாய் உருவெடுக்க வேண்டிய தேவை இன்று உள்ளது"*[14]

*என்பது சான்றாகிறது.*

*மொழி வழியாக உருவாக்கப்பட்ட அழகு, கற்பு, பண்பு குறித்த பெண் சார்ந்த சொல்லாடல்களைக் கேள்வி கேட்பதாயும் அதன் கட்டுமானங்களைத் தகர்ப்பதாயும் "பெண் மொழி அரசியல்" செயல்படுகிறது. சங்கப் பெண்பாற் புலவர்கள் தங்கள் பாக்களில் சில இடங்களில் கையாளும் இத்தகு சொற்கள் எல்லா நிலையிலும் சமூக நீதிக்குள் கட்டமைக்கப்பட்ட பெண்ணின் அதீத ஆற்றல் சக்தியாக வெளிப்படுவதை உணரலாம். இத்தகு வெளிப்பாடே ஆண்வழியாகப் புனையப்பட்ட பெண்ணிற்கு மாற்றாக "தனக்கேயான தன்னை" இனம் காண உதவிடும்.*

*ஆண்களால் புனையப்பட்ட அல்லது பெண்களால் புனையப்படக் கூடாத இத்தகு பெண் மொழி இரு எதிரிடைகளுக்குமான மொழி அரசியலைக் கேள்வி கேட்கிறது. தன்னை, தன் அங்கங்களை கவிதையாக்குவதும் அதனைத் தன்னோடு நெருங்கிய தொடர்பு கொண்ட இயற்கையோடு பொருத்திப் பார்த்தலும் பெண் மொழியின் அரசியற் செயல்பாடாகிறது. தன்னைப் போலவே இயற்கையும் சுரண்டப்படுவதை எதிர்க்கிற குரலாகப் "பெண்மொழி" சங்க இலக்கியக் கவிதை மரபிலும் தென்படுகிறது. அவள் தன் அதீத ஆற்றல் "உயிரிப்பு ஆற்றல்" தான் என்பதை உணருகின்ற தருணங்களில் அவளது மொழியில் "அங்கங்கள்" கவிதையாவதும் அதற்கான தேவையைக் கோருதலும் நிகழ்கிறது.*

*" ஆண்மை" என்ற சொல் ஆண்களின் வலிமைக்குச் பொருளாகி நிற்பதே காலங்காலமாய் நமது மொழி நமக்குக் கற்பித்த கற்பிதமாக இருக்க, ஔவையாரோ,*

***"செல்வர் அல்லர் என்று யான் இகழ்ந் தனனே!***
***"ஒல்வாள் அல்லள்" என்று அவர் இகழ்ந் தனரே!***
***ஆயிடை,***
***இருபேர் ஆண்மை செய் பூசல்,***
***நல்அராக் கதுவி யாங்கு, என்***
***அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே"***[15] ***(குறு-42)***

*என்ற பாடலில்,*

*ஆண்மை - ஆளும் தன்மை என்ற புரிதலை மீறி இருவருக்கும் உள்ள மனப்போராட்டம் - மனவலிமையாக ஆனதை ஔவை பொதுமையாகக் கொண்டமை மொழியில் பெண்ணின் நிலையை மேம்படுத்துகிற சூழலாக "மொழி அரசியலாக" அமைவதை அறிகிறோம். " ஆண்மை என்பது மன வலிமை என்ற பொருளில் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்ட நிலையை மாற்றி "இருபேராண்மை" என்றமை ஔவையாரால் மொழியிலுள்ள ஆதிக்கத்தினை எதிர்ப்பதாக அமைத்தமை அறியமுடிகிறது.*

*இத்தகு திறனாய்வுகளின் வாயிலாக பெண் மொழியை அடையாளப்படுத்த முற்படுகிற நிலைமை அவசியமானதாகின்றது.*

*"முட்டுவேன்கொல் தாக்குவேன் கொல்" என்ற பெண் மொழியும்*

*"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே" என்ற தன்னம்பிக்கையும்*

*"அவன் எங்கு சென்றாலும் அவனைக் கொணர்வேன்" என்கிற பிடிவாதமும்*

*"அவனுக்காக அழுகிற என் கண்கள் நாணுதற்குரியன" என்ற தேற்றலும்*

*"பரத்தையைத் தழுவிய உன் மார்பை இனிநான் தழுவ மாட்டேன்" என்கிற தன்மானமும் என்று பெண் மொழி அரசியல் மிகக் கூரிய செயல்பாட்டோடு மொழியில் புழங்கப்படுவதை நோக்குவது இங்கு கருதத்தக்கது.*

*மேலும், மொழிசார்ந்த பெண் நிலை இயங்குதல் என்பது சங்க இலக்கியங்களேயன்றி, பக்தி இலக்கியத்திலும் தற்கால இலக்கியங்களிலும் வெளிப்படுவதைக் காண முடிகிறது. மொழியில் அரசியலாக்குவது ஒருபுறமும் மொழியையே அரசியலாக்குவது மறுபுறமும் தற்போது நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. இத்தகு தன்மையை,*

*"தமிழ் இலக்கியப் பெரும்பரப்பு மரபார்ந்த முறையில் அமைந்திருந்தாலும், அம்மரபுகளை மீறுகிற அல்லது அம்மரபுகளிலிருந்து விலகி நிற்பதான பதிவுகளையும் காணமுடிகின்றது. தமிழ் இலக்கியப் பதிவுகளில் ஆண் நோக்கிலான ஆண் குரல்கள் அதிகமாகக் காணப்பட்டாலும் பெண் நோக்கிலான பெண் குரல்கள் ஒலித்துக் கொண்டிருப்பதையும் அறிய முடியும். இலக்கிய உருவாக்கத் தளத்தில் ஆண் செயல்பட்டிருப்பதைப் போலவே பெண்ணும் தொழிற்பட்டிருப்பதைப் பெண்களின் இலக்கியப் பதிவுகளின் வாயிலாக நோக்க முடிகின்றது"[16] என்பதால் அறியலாம். எனவே,*

*தமிழ் மொழி தளத்தில் பெண்மொழி இயங்கியல் என்பது பெண் புலவர்களின் அரசியலாகவே வெளிப்பட்டு நிற்பதையும் அறியலாகிறது. மேலும் உயிரியல் சார்ந்த பெண்நிலை கொள்கையை இவ்வகைப் பெண்புலவர்களின் தனித்த அடையாளமாகக் காணலாம்.*

**புலப்பாடு/எடுத்துரைப்பு நிலை சார்ந்து**

*"எலைன் சோவால்டர் பெண்சார் எழுத்துக்களை மூன்று நிலைகளுக்கு உரியனவாகப் பாகுபாடு செய்துள்ளாரி. பெண்மை நிலை* (Feminine phase) *பெண்ணியநிலை* (Feminists Phase). *பெண்நிலை* (Female Phase) *என்பனவே அவை. பெண்மை நிலை பண்பாடு சார்ந்தது" செயற்கையானது. பெண்ணிய நிலை அரசியல் சார்ந்தது அரசியல்வாத அதிகாரத்தை மையமிட்டது. பெண்நிலை உயிரியல் சாாந்ததொரு கூறு"[17]*

*என்று பெண்மைநிலை, பெண்ணிய நிலை, பெண்நிலைக்கான விளக்கங்கள் பெறப்படுகின்றன. இத்தகு பெண்நிலை உயிரியல் சார்ந்து செயல்படுவது என்பதால் இதில் இரண்டு வகைப்பட்ட உயிரியல் தொடர்பைக் காணலாம். ஒன்று "தான்" என்ற தொடர்புக்குட்பட்டது மற்றொன்று "மற்றவை", "பிற" என்ற சார்பிற்குட்பட்டது. தன்னையும் தன்னால் உருவாக்கப்படுகிற பிரபஞ்ச உயிரிகளையும் பற்றிய எடுத்துரைப்பில் பெண் முதன்மை வகிக்கிறாள் எனலாம்.*

*சங்ககாலப் பெண்நிலைக் கவிதைகள் ஆண் கற்பிதங்களை ஏற்றும் மறுதலித்தும் செயலாற்றுகிறது. மரபுசார்ந்த படைப்புகளான இவை, ஆண்மட்டுமே எடுத்துரைக்கத்தக்கவை என எவற்றையெல்லாம் சமூகம் கட்டுக்குள் கொண்டு சென்றதோ அவற்றை மீறுகிற*

*வெளிப்பாடாகவெ தென்படுகின்றன. எல்லாப் பொருட்களும் உயிரி வாழ்வன* (Biotic Compinents) *உயிர் வாழ முடியாத அல்லது உயிரற்றனவை* (Abiotic Components) *ஆகிய இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகைப்பாடுகளை தன் உயிர்ப்பு ஆற்றலுக்குரியனவைகளாக மொழியின் வழி எடுத்துரைப்பதை அறியலாம்.*

*இவர்களது எடுத்துரைப்பு நிலை உயிரினங்களுக்கும் சில வேளைகளில் உயிரற்றனவற்றிற்கும் இடையே நிலவக் கூடிய உறவுமுறைகளை சுற்றுச்சூழலோடு ஒப்பிட்டுப் பார்க்கிற தன்மையை வெளிக்கொணருகிறது. சமூக மரபிற்குட்பட்ட பெண் தனது மரபு மீறலை வெளிப்படுத்த இயற்கை ஒரு காரணியாகிறது. தன் எடுத்துரைப்பு நிலைக்கு சூழலியலைக் கையாளுவது பெண்ணின் திட்டமிடலாக வெளிப்படுகிறது. பெண்ணுக்குரியனவாகக் கருதப்பட்ட பண்புகளை, அவளது ஒழுக்க நெறிகளை. சமூகத்தின் அதிகார விதிகளை மீறுகிற பெண் அத்தகு சொல்லாடல்களைப் புறந்தள்ளுகிறாள். அதாவது,*

*அச்சம், மடம். நாணம், பயிர்ப்பு பெண்ணுக்குரிய பண்பாகச் சொல்லப்பட்ட சூழலில் அச்சத்தைத் தூக்கி எறிந்துவிட்டு தலைவனைத் தேடி அலைந்த பெண், தலைவனே வேண்டாம் என்கிற பெண், மண்கலக் கசிவு போல காமம் கசிகிறது என்கிற பெண், காம நோய் மிக்கது ஆற்றமுடியவில்லை என்கிற பெண், பாலியல் துய்ப்பின்மை என்கிற துன்பத்தை எடுத்துரைக்கும் பெண்களைச் சங்கப் பாடல்களில் வெகுவாகக் காணமுடிகிறது.*

**முடிவுரை**

*இயற்கை பற்றி கவிதை எழுதுதலும் இயற்கைச் சூழலைக் கவிதையாக்குவதும் வேறு என்கிற புரிதல் வேண்டும் இந்தத் தெளிவின்மை* (ambiguity) *என்பது இலக்கிய ஆராய்ச்சியில் தவறான முடிவுகளைத் தர வழிவகுத்துவிடும். எனவே இயற்கை குறித்து எழுதுவதும் இயற்கையான ஆழலைக் குறித்து எழுதுவதற்கமான தெளிவு அவசியமாகிறது. இயற்கையை மையப்படுத்திய பெண்/ஆண் புலவர்களின் போக்குகள் அவரவர் இயல்பிலேயே அமைந்தது சங்க இலக்கியத்தின் தனித்துவமாகும்.*

*தனது அதிகார எல்லைக்குப் போரிடுகிற ஆண் தனது இருப்பிற்காகப் போரிடுகிற பெண் என்ற இரு எதிரிடைகளுக்குமான சூழலியல் போராட்டம் சங்க இலக்கியத்தில் தென்படுகிறது. நிலவு, அழகு, இயற்கை என அழகியலோடு எழுதுவதெல்லாம் சூழலியலில் சேராது. ஆனால் சூழலியல் இவை அனைத்தும் இழையோடித்தான் இருக்கும். இத்தகு சூழலை உணர்ந்த பெண் படைப்பாளிகள் தங்கள் படைப்புலகில் இயற்கைக்கான இடத்தை நிறுவுகின்றனர்.*

*யானை, குதிரை, சிங்கம், புலி, மான், குரங்கு, அணில், காகம், வண்டு என உயிர் வாழ்வனவற்றையும் பூ, தாவரங்கள், மரங்கள், பஞ்சபூதங்கள் எனப் பிறவற்றையும் தன் இயற்கை மையச் சிந்தனைக்குள் புனைகிறபெண், முப்பொருண்மைகளையும் இயற்கையின் பாற்பட்டே கவிதை புனைந்தமை அறியலாகிறது. தலைவனைக் காண ஏங்கினாலும், தலைவனை மறுத்தாலும் இயற்கையைக் கொண்டாடுதலை மறக்காத பெண்நிலையும், இயற்கை மீதான பேரச்சத்தை உண்டு பண்ணி நீ பாதுகாக்கப்பட வேண்டியவள் என்று பெண்ணின் மீதான அதிகாரத்தைச் செலுத்துகிற ஆண்நிலையும் சங்கப் பாக்களில் தென்படுகின்றன. பெண்ணுக்குப் பெண்ணே சமூக விதிகளை ஏற்றுமாறுபடுகிற தன்மையும்*

*பெறப்படுகிறது. தன்னுணர்வு வெளிப்பாட்டிற்குப் பெண் கையாளுகிற இயற்கையை அதன் சூழலை தனக்கான மொழியாகக் கொள்ளுதலும் புலப்படுகிறது.*

*முட்டை, உழவு, தேன், சூல், மகரந்தச்சேர்க்கை, நீர், மழை, இடி, ஒலி, ஒளி, காட்டாறு, காடு, அருவி, சுனை, மலைச்சாரல், நிலவு, கிழங்கு, கடல், குன்று, வயல், மேகம், கோடைகள், கானல் நீர், காற்று, வேப்பம்பழம், கள்ளிக்காடு, ஓணாண் நிமித்தம், சேவல், புனை, யானை, புலி, காக்கை, கன்று, பசு, மீன் கிணறு, பாறை, புந்தாது, குளம், மலர், பாலைநிலம், காலம், மயில், மூங்கில்புதர், பறை, வின்மீன், வானம், இருள், நெல்லிக்கனி, பிறகனிவகைகள், யாழிசை, நெற்கதிர், யானைக்கவளம், குகைகள், விண்ணுலக/வானவர் உலகு, புல், புள் என அனைத்தையும் தன் கவிதையில் புலப்படுத்துகிற பெண்ணின் கவிதையாக்கத்தில் இவைகளது முக்கிய பங்கே சிறப்பானதாகும்.*

*தான் கூற வந்ததை தலைவனுக்கும் இச்சமூகத்திற்கும் எடுத்துரைக்க பெண் இயற்கையை ஆயுதமாக்குகிறாள் எனலாம். இவற்றில் நீர், நிலம் என்பவற்றை முற்றிலும் தன்னைப் போலவே/தானாகவே கருதுகிற பாங்கு அறியலாகிறது. பெண்ணிய தத்துவங்கள் குறித்த கருத்து, ‘‘அடிப்படைப் பெண்ணியத் தத்துவம் இயற்கை விதிமுறைகளை அரவணைப்பது’’ என்கிறது, எனவே ஆணாதிக்கமும் அதன் கண்டுபிடிப்புகளான செயற்கை விஞ்ஞானமும் பெண்ணோடு பெண்மையக் கருத்துக்களோடு ஒத்துவராதவை என்பது புலப்படுகிறது. இச்சூழலில் தான் பெண் மையக் கருத்தான பிரகிருதி - மூலப்பெண் - ஆதிசக்தி குறித்த கருத்தாடல்கள் முன் வைக்கப்படுகின்றன. இதனை, ‘‘இயற்கை, உலகை வாழ வைப்பது மற்றும் புதுப்பிப்பது இந்தப் பெண்ணியச் சக்தி. தமிழ்மரபில் இதனைச் சக்தி என்று சொல்வது பொருந்தும், இந்த நோக்கில் பெண்ணியம் குறித்தபார்வை விரிவு பெற வேண்டும்’’ என்பதால் அறியலாம். இயற்கைத் தன்னை தகவமைத்துக் கொள்கிறது. அது போல பெண்ணும் தனித்த ஆற்றலுடையவளாகத் தன்னை உணர்ந்து அவளது மறுமலர்ச்சி குறித்த சிந்தனையை மொழி வழி பிரதிபலிக்கிறாள். தாய்வழிச் சமூக அமைப்பில் தலைமை பெற்ற உயிரி இன்று இரண்டாம் பட்சமானதாக மாற்றப்பட்ட சூழல் ஆதிக்கசக்திகளின் போக்குகளாலே தான் என்பதை பெண் உணர வேண்டும். எனவே பெண் மறுமலர்ச்சி சிந்தனை என்பது குறித்து அறிவது அவசியமாகின்றது. பெண் தன்னைப் புலப்படுத்துகையில் இயற்கை என்பது அடித்தளமாக இருப்பதை அறியலாம்.*

**அடிக்குறிப்புகள்**

1. *புறநானூறு-206*
2. *குறுந்தொகை -29*
3. *குறுந்தொகை -232*
4. *குறுந்தொகை -99*
5. *நற்றிணை-295*
6. *முனைவர் சு.சண்முகசுந்தரம், பெண்ணியம், பக்.9-10.*
7. *முனைவர் அன்னிதாமசு, தமிழக மகளிரியல், பக்.121-122.*
8. *சரசுவதி வேணுகோபால், ‘‘வாய்மொழி இலக்கியத்தில் பெண்ணிய சிந்தனைகள்’’, பெண்ணியம். ப-1.*
9. *முனைவர் அன்னிதாமசு, மு.கு.நூ.பக்-90.*

10. செல்வி திருச்சந்திரன், பெண்ணிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும் ஒரு சமுகவியல் நோக்கு, ப-5.
11. மேலது, ப-7
12. மேலது, ப-8
13. செல்வி திருச்சந்திரன், "மொழியும் ஆண்வழிச் சமூகஅமைப்பும்" ஊடறு.ப.71.
14. முனைவர்.சு.புங்கொடி, "மாலதி மைத்ரி கவிதைகளில் பெண் உடல் மொழி", இருப்பின் வலி, ப.12.
15. குறுந்தொகை-42
16. மகாராசன், "பெண்மொழி இயங்கியல்", ப-166.
17. மேலது, ப.110.

**References**

1. *Shanmugasundaram, S., Penniyam, pp.9-10.*
2. *Annithamasu, Tamilaga Magaliriyal, pp.112-122.*
3. *Saraswati Venugopal, 'Vaimozhi Ilakiyathil Penniya Sinthanaigal' Penniyam, P.1.*
4. *Thiruchandran, Pennilai Vathamum Kotpattu Muranpadugalum Oru Samugaviyal Nokku, P.5.*
5. *Thiruchandran, 'Mozhiyum Aanvali Samuga Amaippum, Udaru, P.71.*
6. *Poongodi, S., 'Malathi Mythiri Kavithaigalil Pen Udal Mozhi', Iruppin Vali, P.12.*
7. *Maharasan, Penmozhi Iyangiyal', P.166.*